www.tamilarangam.net

# தமிழீழ தகவல் நடுவம்
# THAMILEELAM INFORMATION BUREAU

BM BOX 1916 LONDON WC1N 3XX
T. Phone: 01-472 2588

TIB

**செய்திகள் ...**

07.01.87

*)31.12.86 அன்று யாழ்/தெல்லிப்பளை, கட்டுவன், குரும்பசிட்டி, குப்பிளான் பகுதிகள் மீதுஸ்ரீலங்க விமானப்படையினர் ஹெலிகொப்டர்களில் இருந்து, குண்டுவீசித்தாக்கியுள்ளனர். இதன் போது, இரு சிறுவர்கள் கொல்லப்பட்டு பலர் படுகாயமடைந்துள்ளதுடன், சில வீடுகளும் சேதமாக்கப்பட்டுள்ள அத்துடன் குடாநாட்டிற்கான எரிபொருள் விநியோகத்தை அரசு முற்றாக நிறுத்தியுள்ளது.

*)அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்று—பொத்துவில் இடைப்பட்ட பகுதியில், 6 புதிய முகாம்களை— அரச படையினர் அமைக்க முயன்று வருகின்றனர். திருக்கோயில் உதவி அரசாங்க அதிபர்பிரிவிற்குள் உள்ள 'தாண்டியடி' எனுமிடத்தில், பாக்கிஸ்தானில் பயிற்சி பெற்ற விசேட அதிரடிப் படையின 200 பேர் கொண்ட புதிய முகாம் அமைக்கப்பட்டுள்ளன.

*)மட்டு/மாவட்ட கல்லடி, ஆரணி, அக்கரைப்பற்று பகுதிகளில் தமிழ் பெண்களுடன் ஸ்ரீலங்கா அதிரடிப் படையினர்தகாத முறையில் நடந்து வருவதனைக் கண்டித்தும், அப்பாவி மக்களை கைது செய்தலை நிறுத்தவும் கோரி, அப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்பாக, அப்பகுதி தமிழ்ப்— பெண்கள் சத்தியாக்கிரக மொன்றினை மேற்கொண்டு வருகின்றனர்.

*)04.11.86 அன்று, யாழ்ப்பாணத்தில் வைத்து புலிகள் இயக்கத்தினரால் கடத்திச்செல்லப்பட்ட— யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரன் கொலை செய்யப்பட்டு விட்டார் என்று, புலிகள் இயக்கத்தினர் யாழ் நகரில் பகிரங்கமாக அறிவித்துள்ளனர். விஜிதரன் பற்றி தமக்கு ஒன்றுமே தெரியாது என்று பல விதங்களில் மறுப்பு அறிக்கைகளை புலிகள் இயக்கத்தினர் வெளியிட்டு வந்தமை— குறிப்பிடத்தக்கது. மேற்படி, தமிழீழத்தில் அதிகரித்து வரும், புலிகளின் 'தமக்கு தெரியாது' என்ற தாரக மந்திரத்தின் உள்ளடக்கம் இப்போ மக்களுக்கு புரிய ஆரம்பித்துள்ளது.

*)31.12.86 அன்று, மன்னார் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த முஸ்லீம் வர்த்தகர் ஒருவரைபுலிகள் இயக்கத்தினர் கடத்திச் சென்றுள்ளனர். பணயத் தொகையை கோரி நின்ற புலிகளின் செயலைக்— கண்டித்து, அவ்வூர் முஸ்லீம் மக்கள் 01.01.87 அன்று கடையடைப்புப் போராட்டம் நடாத்தி— யுள்ளனர்.

*)01.01.87 அன்று, மட்டு/அம்பலாந்துறை என்ற பகுதியில், புலிகள் இயக்கத்தினரைக் கண்டு பதுங்கிய 4 அவ்வூர் விவசாயிகளை, புலிகள் இயக்கத்தினர் , ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தினர் என நினைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரு அப்பாவி விவசாயிகள் கொல்லப்பட்டதுடன்— மற்றும் இரு விவசாயிகள் படுகாயமடைந்துள்ளனர்.

*)யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா அரசுடன் நேரடிப் பேச்சுக்களில் ஈடுபட்டு வரும் புலிகள் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான 'கிட்டு' அறிக்கை மூலம் விடுத்த அறிக்கையில், ஸ்ரீலங்கா அரசுடனான பேச்சுக்களில் இந்தியாவின் மத்தியஸ்தவம் பற்றி தேவைப்பட்டால் பின்னர் பரிசீலிப்பது என்பதனையும், 14.01.87 ல் தமிழீழப் பிரகடனம் செய்யப்போவதாக அறிவித்ததனையும் மறுத்து புலிகளின் மற்றொரு தலைவர்களில் ஒருவரான அன்ரன் பாலசிங்கம் விடுத்த அறிக்கையில், இந்திய அரசாங்கம் சம்பந்தப்படாமல் ஸ்ரீலங்கா அரசுடன் நேரடிப் பேச்சுவார்த்தை சாத்தியமில்லை— என்றும், கிழக்கு மாகாணத்தையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வராமல் தமிழீழப் பிரகடனம் — அர்த்தமற்றது என்றும் தெரிவித்துள்ளார்.

*)யாழ்ப்பாணத்தில் வாகனங்களின் உரிமையாளர்களை வருடாந்த உத்தரவுப் பத்திரம் பெற்றுக் — கொள்ளுமாறு புலிகள் இயக்கத்தினர் பலவந்தப்படுத்திவரும் அதே வேளையில் பெருந்தொகையான மக்கள் வாகனங்கள் பயன்படுத்துவதை கைவிட்டுள்ளனர். மேலும் புலிகள் இயக்கத்தினர்க்கு எதிராக பிரச்சாரங்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பெயரில், யாழ்ப்பாணத்தில் இருந்து— வெளியாகும் தமிழ் தினசரிப்பத்திரிகையொன்று புலிகள் இயக்கத்தினரால் பலாத்காரமாக கைப் பற்றப்பட்டுள்ளது.

*)04.01.87 முதல் குடாநாட்டிற்கான விறகு விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளன. அத்துடன்எரிபொருள் தட்டுப்பாடு குடாநாட்டை பெரும் பாதிப்பிற்குள்ளாக்கியுள்ளது. போக்குவரத்து, விவசாயம்— கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் உணவுத்தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை உருவாகிவருகிறது. மாற்றுத்திட்டம் இல்லாத நிலையில் சிவில் நிர்வாகத்தை அமுல்படுத்த முயன்ற புலிகள் இயக்கத்தினரின் நடவடிக்கைகளுக்கு மக்களிடம் இருந்து பலத்த எதிர்ப்பு கிளர்ந்துள்ளன.

*)யாழ் குடாநாட்டில் பொருளாதாரத் தடையொன்றிற்காக ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்து பாரதம் தனது ஆழ்ந்த கவலையை தெரிவித்துள்ளது.

*)07.01.87 அன்று காலை மட்டு/மஞ்சந்தொடுவாய் பகுதிக்கு அருகில் உள்ள கடற்பிராந்தியத்தியத்தில் வள்ளமொன்றில் வந்த 5 மீனவர்களை, அதிரடிப்படையினர் சுட்டுக்கொன்றுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*)தமிழ்நாட்டில் இருந்து இயங்கி வரும் தமிழ் போராளிகளை இரஜீவ் காந்தி, நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டுமெனவும், இதனைச் செயற்படுத்தினால் தான் போராளிகள் விடயத்தில் தான் உறுதியான நடவடிக்கை எடுக்க முடியுமெனவும், பேச்சு மூலம் தீர்வு ஏற்படாவிடில் இராணுவ நடவடிக்கை மூலம் போராளிகளை நசுக்குவேன் எனவும்; 'நியூஸ் வீக்' எனும் சஞ்சிகைக்கு ஜயவர்த்தனா அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

*)ஸ்ரீலங்காவின் 8 பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த துணைவேந்தர்கள், விரிவுரையாளர்கள் மற்றும்பாதுகாவலர்கள் உட்பட மற்றும் பலரும் சம்பள உயர்வு கோரி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் இதன்காரணமாக 05.01.87 ல் திறக்கப்பட வேண்டிய பல்கலைக்கழகங்கள் திறக்கப்படாமல் காலதாமதமேற்பட்டுள்ளன.

*)மலையகப் பகுதியில் உள்ள தலவாக்கொல்லையில் சென் கொல் தோட்டத்தின் தொழிற்சங்கவாதியான பிச்சைமுத்து நேசையா என்பவரை தேயிலை ஆராய்ச்சி கல்வி கழக நிலையத்தினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு, விடுவிக்கப்படாமையால் அவரை விடுதலை செய்யக்கோரி, 5000 ற்கும் மேற்பட்ட தோ. தொழிலாளர்கள் மேற்படி நிலையத்தை முற்றுகையிட்டு, ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். இதனை அடக்குமுகமாக பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில், இரு தொழிலாளர்கள் கொல்லப்பட்டு 18 பேர் படுகாயமடைந்துள்ளனர்.
மேற்படி நிலையத்தினரால் பிச்சைமுத்து நேசையா கொலை செய்யப்பட்டு விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

*)07.01.87 பிற்பகல் முதல் ஸ்ரீலங்கா அரச படைகள் யாழ் நகரின் பல பகுதிகள் மீது, ஹெலிகொப்டர்களில் இருந்தும், யாழ் கோட்டையில் இருந்து பீரங்கிகள் கொண்டும் தாக்க ஆரம்பித்தனர், மறுநாள் வரை தொடர்ந்த தாக்குதல்களில் சில வாகனங்கள் உட்பட பல கட்டிடங்கள் சேதமாகியதுடன், 8 ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டு பலர்படுகாயமடைந்துள்ளனர். 08.01.87 ல், யாழ்/கோட்டை இராணுவத்தினர் முகாமை விட்டு வெளியேறி அருகில் உள்ள 3 கட்டிடங்களில் நிலைகொண்டுள்ளனர். மற்றும் பருத்தித்துறை முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் அம் முகாமைச் சுற்றி, ~~தமிழீழ மக்கள் விடுதலைக் கழக இராணுவப் பிரிவினர்~~ அமைத்திருந்த பாதுகாப்பு அரண்கள் யாவற்றையும் தாக்கி அழித்துள்ளனர்.
மேற்படி, பாதுகாப்பு அரண்கள் பல வற்றை, வடபகுதி இராணுவ முகாம்களைச் சுற்றி அமைத்து ஏனைய போராளிகளுடன் இணைந்து, அரச படைகளை முகாம்களுக்குள் முடக்கி வைத்திருந்தத்மிழீழ மக்கள் விடுதலைக் கழக இராணுவப் பிரிவினரை கடந்த இரு மாதங்களின் முன், புலிகள் இயக்கத்தினர் பலாத்காரமாக வெளியேற்ற முனைந்த போது, இரத்தக்களரி ஒன்றைத் தவிர்க்கு முகமாக, கழகத்தினர் தற்காலிகமாக மேற்படி பாதுகாப்பு அரண்களில் இருந்து வாபஸ் பெற்றது தெரிந்ததே!
அப்படியாக கழகத்தினரால் தற்காலிகமாக வாபஸ் பெறப்பட்டிருந்த பாதுகாப்பு அரண்களையும், சென்றிகளையும், புலிகள் இயக்கத்தினர் ஆக்கிரமித்து இருந்த நிலையிலேயே, 08/01 அன்று பருத்தித்துறையில் நடந்த அரசபடைகளின் தாக்குதல்களின் போது, முகம் கொடுக்க முடியாது பின் வாங்கி, அரண்கள் அனைத்தையும் புலிகள் இயக்கத்தினர் பறிகொடுத்துள்ளனர்.

*)குடாநாட்டில் இராணுவ முகாம்களை விட்டுவெளியேற அரச படைகள் முனைப்புடன் செயற்பட்டு வருகிற இவ்வேளையில், மறுபுறத்தில் குடாநாட்டிற்கான அத்தியாவசிய தேவைகளை படிப்படியாக நிறுத்திவரும் அரசின் திட்டமிட்ட நடவடிக்கையின் அடுத்த கட்டமாக குடாநாட்டிற்கான மின்சாரத்தை அரசு 08/01 உடன் முற்றாக துண்டித்துள்ளது.

*)வடபகுதிக்கு அலுமினிய பொருட்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஏற்றி வந்த 15 லொறிகளை அரசபடையினர் வவுனியாவில் தடுத்து நிறுத்தி வைத்துள்ளனர். அத்துடன் குழந்தைகளுக்கான பால்மாவுடன் வந்த லொறிகளும் ஆனையிறவு தடைமுகாமில் அரச படைகளால் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மாற்றுத்திட்டமில்லாத புலிகளின் சிவில்நிர்வாக அமுலாக்க முயற்சியைத் தொடர்ந்து குடாநாட்டில் அரசு மேற்கொண்டு வரும் பொருளாதாரத் தடைகளாலும், இராணுவ ஆக்கிரமிப்புக்களாலும் பலத்த நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருக்கும் பொது மக்கள் குடாநாட்டை விட்டு வெளியேறும் நிலையில் உள்ள இச் சூழ்நிலையில், "புரட்சி என்றால் இப்படித்தான் என்றும், இதுபோல்அரசு முன்னரும் செய்துள்ளதென்றும்" புலிகள் இயக்க தலைவர்களில் ஒருவரான 'கிட்டு' பொதுமக்களுக்கு அறிக்கை மூலம் ஆறுதல் தெரிவித்துள்ளார்.

---

தமிழீழ தகவல் நடுவ 24 மணிநேர செய்திகளுக்கு : தமிழ் 01 470 6270,
ஆங்கிலம் 01 552 5970,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்